மதுவரி வெகுமதி நிதியம் - 2021

---

1. **நிதிக்கூற்றுக்கள்**

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதுவரி வெகுமதி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றின் பொழிப்பினை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1990 இன் 37 ஆம் இலக்க மதுவரி கட்டளைச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1912 இன் 08 ஆம் இலக்க மதுவரி கட்டளைச் சட்டத்தின் 58 ''ஏ'' பிரிவு மற்றும் மதுவரி கட்டளைச் சட்டத்தின் 32(2) (கிவ்) பிரிவின் கீழான இலக்கம் 818 மதுவரி அறிவித்தல் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, மதுவரி வெகுமதி நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2019 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் விடயப் பரப்பு விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் இணங்கியிருந்தது என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தன என்பதும்,

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

---

### 1.5.1 நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பிலான உள்ளக கட்டுப்பாடு

---

கொடுக்கல் வாங்கல்களின் முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான அதிகாரத்துடன் நடைமுறைப்படுத்தல், உரிய நிதியிடல் நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்கறிக்கையை பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் குறிப்பான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களுக்கு பிரவேசித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களித்தகைமை பேணப்பட்டு

சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியினுள் ஒப்பிடல் மற்றும் வேறுபாடுகள் காணப்படுமாயின் அவை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்தல் ஆகியவற்றுக்காக நியாயமான உறுதிப்பாடொன்றை பெற்றுக்கொள்ள போதியளவான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு கட்டமைப்பொன்றினை நிறுவனத்தினால் நடாத்திச் செல்லப்படல் அவசியமானதாகும். பொதுப் பேரேடு, நாட்குறிப்பு, நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டு அறிக்கைகளை பேணிச் செல்லல் தொடர்பிலான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

### 1.5.2 இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் பெறுமானத்தேய்வு கொள்கையில் மாற்றங்கள் நிதிக்கூற்றுக்களில் சீராக்கும் போது தேறிய சொத்துக்களில் அல்லது உரிமை மூலதனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவன் கீழ் ஆரம்ப மீதியில் சீராக்கம் செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் உரிய சீராக்கம் மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வு செலவினத்தில் சீராக்கப்பட்டமையின் காரணமாக பெறுமானத்தேய்வு செலவினம் ரூபா 5,223,587 அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதிச் செயலாற்றல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 5,318,747 ஆன சிகரட் தண்ட பணத்தில் 75 சதவீதம் அரசாங்க வருமானத்திற்கு செலுத்துதல் ரூபா 3,989,060 ஆக இருக்க வேண்டிய போதிலும் அந்த தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் ரூபா 4,132,385 ஆக காண்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக ரூபா 143,325 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | சிகரட் தண்டப்பண வருமானத்தின் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய ரூபா 75 சதவீதம் கணிப்பிடும் போது 2021 ஆம் ஆண்டில் கிடைக்க வேண்டிய சிகரட் தண்டப்பண வருமானமும் உள்ளடக்கப்பட்டு கணிப்பிடப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிநிலைமைக் கூற்றில் காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 47,134,000 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அது கட்டிடத்தின் பெறுமதி மாத்திரமாகும். எனினும் கட்டிடம் அமைந்துள்ள காணி மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யப் படாதிருந்ததுடன் காணியின் உரித்தை உறுதிப்படுத்து வதற்கு தேவையான ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | கல்வி அமைச்சிற்கு உரிய காணியாக இருந்தமையால் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. கையளித்தல் சான்றிதழ் இதுவரை கிடைத்திருக்க வில்லை. | கட்டிடம் அமைந்துள்ள காணியை முறையான பிரகாரம் உரித்தை உறுதிப்படுத்தி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் ரூபா 47,134,000 தொகையான கட்டிடத்திற்காக பெறுமானத்தேய்வு சீராக்கம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 2022 ஆம் ஆண்டின் போது பெறுமானத்தேய்வு கணிப்பிடுவதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி சட்டத்தின் 17(அ) I மற்றும் II ஆம் பந்திகள் | சிகரட் தண்டப்பணத்தில் 25 சதவீத பங்கினால் புகையிலை பரிசு நிதியத்தை தாபிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட திகதி முதல் மீளாய்வாண்டின் இறுதி வரை அவ்வாறான நிதியமொன்றை தாபிக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா | புதிய திருத்தங்களை உள்ளடக்குவதற்காக சட்ட வரைவு திணைக்களத்துடன் கலந்துரையாடி உரிய திருத்தங்களை தயாரித்தல் ஆரம்பிக்கப் பட்டுள்ளதுடன் நிதியம் தொடர்பாக வருகின்ற முன்மொழிவுத் திட்டத்திலும் வரைவைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | 1999 இன் 8 ஆம் இலக்க புகையிலை வரி சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் புகையிலை பரிசு நிதியமொன்றை தாபித்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 20,437,066 ஆன வருடாந்தம் ஒதுக்கப்பட்ட தொகை நிதியத்திற்கு செலுத்த வேண்டிய தொகையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 877(2)(அ) | மீளாய்வாண்டு வரையும் வெகுமதி நிதியத்திற்காக தனியான வங்கிக் கணக்கொன்று பேணிச் செல்லப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 119 மில்லியன் ஆன வெகுமதி நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் ரூபா 179 மில்லியன் ஆன நிதியத்தின் செலுத்துகைகள் மதுவரித் திணைக்களத்தின் வங்கிக் கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. | 6/60 பொது வைப்புக் கணக்கொன்று அரச கணக்குகள் திணைக்களத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அதனால் நிதியத்தின் பெறுவனவுகள் மற்றும் செலுத்துகைகள் திணைக்களத்தின் வங்கிக் கணக்கான 7041628 கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) | 2021 ஆம் ஆண்டில் மதுவரி வெகுமதி நிதியத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் நிதியத்தின் செயலாற்றல் அறிக்கையொன்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டு முதல் நிதியத்தின் செயலாற்றல் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-----------------------------

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 71,662,784 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மிகை ரூபா 7,177,264 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 78,840,048 வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு ஒட்டுமொத்த கட்டணம் மற்றும் சிகரட் தண்டப்பண வருமானம் ரூபா 35,179,502 அதாவது 22.5 சதவீதத்தால் குறைவடைந்தமை மற்றும் வெகுமதி பணம் செலுத்துதல், புகையிலை நிதியத்திற்கான செலுத்துகைகளை உள்ளடக்கிய செலவினம் ரூபா 43,660,546 அதாவது 29 சதவீதத்தால் அதிகரித்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 2.2 நிதியத்தின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|

**(அ)** மீளாய்வாண்டிற்காகவும் கடந்த 04 ஆண்டுகளுக்காகவும் நிதியத்தின் தேறிய சொத்துக்களில் ஏற்பட்ட தாக்கங்கள் தொடர்பான விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | மிகை / பற்றாக்குறை | தேறிய சொத்துக்கள் | தேறிய சொத்துக்களுக்கு ஏற்பட்ட தாக்கம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | சதவீதமாக |
| 2017 | 8,646,536 | 490,807,718 | 7 |
| 2018 | 36,759,028 | 527,566,746 | 7 |
| 2019 | (160,411,245) | 367,155,501 | (30) |
| 2020 | (42,813,392) | 324,342,110 | (12) |
| 2021 | (71,662,783) | 252,679,326 | (22) |

2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் நிதியத்தின் தேறிய சொத்துக்களில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை தேறிய சொத்துக்களில் முறையே 30, 12, 22 சதவீதம் ஆக வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது.

*முகாமைத்துவத்தின் கருத்துரை:* 2019 ஆம் ஆண்டு முதல் மதுவரித் திணைக்களத்தில் சேவையாற்றிய சகல மதுவரி மற்றும் நாடளாவிய சேவை பதவியணியினருக்காக பரிசு பணம், ஊக்குவிப்பு படியாக வழங்குவதற்கு ஏற்பட்டமை மற்றும் 2020 ஆம் ஆண்டு முதல் ஒட்டுமொத்த கட்டண வருமானம் குறைவடைந்தமை இதற்காக தாக்கமளித்திருந்தது.

*பரிந்துரை:* நிதியத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்து செயற்பாட்டு நடவடிக்கை களிலிருந்து மிகையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

**(ஆ)** மீளாய்வாண்டிலும் மற்றும் கடந்த 04 ஆண்டுகளிலும் திறைசேரியில் காணப்பட்ட நிதியத்தின் வைப்புக் கணக்கில் ஆண்டின் இறுதியில் மீதி தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | தேறிய நிதி அதிகரிப்பு / குறைவு | வைப்புக் கணக்கின் மீதி | வைப்புக் கணக்கீன் மீதியில் ஏற்பட்ட தாக்கம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | சதவீதமாக |
| 2017 | 25,504,151 | 388,502,890 | 7 |
| 2018 | 26,882,015 | 415,384,906 | 6 |
| 2019 | (214,749,066) | 200,635,839 | (51) |
| 2020 | 2,129,466 | 202,765,306 | 1 |
| 2021 | (60,127,569) | 142,637,736 | (30) |

நிதியத்தின் நிதி நிலைமையை அதிகரித்துக் கொள்வது தொடர்பில் மீளாய்வாண்டின் போதும் கவனம் செலுத்தப்படாதிருந்ததுடன் 2017, 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் திறைசேரியில் காணப்பட்ட நிதியத்தின் வைப்புக் கணக்கில் அதிகரிப்பு காண்பிக்கப்பட்ட போதும், 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போதும் நிதியத்தில் போதியளவான நிதி வீழ்ச்சிக்கு பரிசு நிதியத்திலிருந்து திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற சகல

*முகாமைத்துவத்தின் கருத்துரை:* நாடு முழுவதும் தொடர்ச்சியாக அவ்வவ்போது காணப்பட்ட மதுவரி உத்தியோகத்தர்களின் கட்டுப்பாடின்மையின் காரணமாகவும் மற்றும் மதுபான சாலைகளில் தொடர்ச்சியான செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படும் வகையில் ஏற்பட்ட முறைகளையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும். இதற்காக நிதியத்தின் நிதி நிலைமையை அதிகரித்துக் கொள்ளும் நோக்கில் ஒட்டுமொத்த மதுபான வழங்கல்களையும் பரீட்சித்தல் மற்றும் மேற்பார்வையில் மோசடிகளை பிடிக்கும் அடிப்படையில் தொழில் குற்ற அறிக்கை சமர்ப்பிப்பதற்கு

*பரிந்துரை:* நிதியத்தின் நோக்கங்களுக் குரிய செலவினங்களை மாத்திரம் செய்வதன் மூலம் நிதி நிலைமையை பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| உத்தியோகததர்களுக்கும் ஊக்குவிப்பு படி செலுத்தியமை பிரதான காரணமாக இருந்தது. | கட்டளை வழங்கப்பட்டுள்ளது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் பிரகாரம் வெகுமதி நிதியத்திற்கு செயற்குழுவொன்று நியமித்திருந்த போதிலும் ஆண்டின் போது அந்தக் குழுவினால் பாதீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளை மீளாய்வு செய்து உறுதிப்படுத்திக் கொள்வதற்காக குழுக் கூட்ட அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | மதுவரி வெகுமதி நிதியத்திற்குரிய செயற்குழு அறிக்கை எதிர்வரும் வருடத்தின் போது குறித்துரைத்த பிரகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுமென கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | குழுக் கூட்ட அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல் அமுல்படுத்தப்பட்டு 2021 ஆம் ஆண்டு வரையில் 26 வருடங்களை விஞ்சியிருந்ததுடன் வெகுமதி பணம் செலுத்தும் போது திணைக்களத்தின் பணிப்பொறுப்புக்களின் விரிவினை கவனத்தில் கொண்டு இந்த மதுவரி அறிவித்தலை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்ட போதிலும் இதுவரையிலும் அந்த செயற்பாடுகளில் கவனத்தில் கொள்ளக்கூடிய செயல்முன்னேற்றமொன்று அவதானிக்கப்படவில்லை. | தற்போதைக்கு பொருத்தமான வகையில் 1994 மார்ச் 04 ஆந் திகதிய 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலை திருத்தி நிதியமைச்சின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | தேவையான திருத்தங்கள் விரைவாக பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டுகளுக்குரிய தொழில் குற்ற பிடித்தல்கள் தொடர்பாக மதுவரி திணைக்களத்தின் சட்ட அமுலாக்கல் பிரிவினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பிடித்தல்கள் தொடர்பான தகவல்களின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை சுற்றிவளைப்புக்களின் இலக்கு வழங்குதல் வருடாந்தம் படிப்படியாக குறைவடைந்திருந்தது. மேலும் இலக்கிடப்பட்ட பிடித்தல்களுக்கு ஒப்பீடாக மேற்கொள்ளப்பட்ட பிடித்தல்களின் அளவு அதிகரித்திருந்த போதிலும் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை | 2017 முதல் 2019 ஆம் ஆண்டு வரை தொழில் குற்ற பிடித்தல்களின் இலக்கை நிலையானதாக பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன் அந்த இலக்கு ஒவ்வொரு வருடத்தின் போதும் விஞ்சிச் செல்வதற்கு உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர். 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் நாட்டில் | மதுபான அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்கள் தொடர்பாக தொடர்ச்சியாக முறையான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

மேற்கொள்ளப்பட்ட பிடித்தல்களின் அளவு படிப்படியாக குறைவடைந்திருந்தது. 2021 ஆம் ஆண்டில் உள்ளபடியான பிடித்தல்களின் எண்ணிக்கை 4098 ஆக இருந்த போதிலும் ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட இலக்கிடப்பட்ட பிடித்தல்களின் எண்ணிக்கை 3428 முதல் 2571 வரை 857 இனால் அதாவது 25 சதவீதத்தினால் குறைவடைந்து 49 சதவீத அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | பிடித்தல்களின் இலக்கு | பிடித்தல்களின் எண்ணிக்கை | ஓவ்வொரு ஆண் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட பிடித்தல்களின் அளவு குறைவு/ ஆதிகரிப்பு | குறைவு/ ஆதிகரிப்பு சதவீதம் |
|---|---|---|---|---|
| ----- | ------- | ------- | ---------- | -------- |
| 2017 | 3613 | 4315 | (278) | (6) |
| 2018 | 3623 | 3684 | (631) | (14) |
| 2019 | 3623 | 3838 | 154 | 4 |
| 2020 | 2272 | 2747 | (1091) | (28) |
| 2021 | 2571 | 4098 | 1351 | 49 |

காணப்பட்ட சிக்கலான நிலைமையினை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்கள் மூடப்பட்டமை, மதுபான விநியோகம் வீழ்ச்சியடைந்தமை மற்றும் அதற்கு இடையூறாக இருந்தமை என்பவற்றின் பிரகாரம் அந்த ஆண்டுகளில் உரிய தொழில் குற்ற பிடித்தல்களின் இலக்கை திருத்துவதற்கு வேண்டி ஏற்பட்டிருந்தது.

(ஈ) 2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதிய 03/2011 ஆம் இலக்க மதுவரி சுற்றறிக்கையின் பிரகாரம் 09 வகைப்படுத்தலின் கீழான 25 பிரதான தொகுதியின் நிபந்தனைகளை மீறல்கள் மற்றும் பொதுவான தொகுதியில் 35 தவறுகள் என்பன காண்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்குரிய கணக்காய்வு செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம் 3093 தொழில் குற்ற பிடித்தல்களின் வெகுமதி பணத்தை செலுத்துவதற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. அதில் 2071 அதாவது 67 சதவீதம் பொதுவான தவறுகளை பிரதிநிதித்துவப் படுத்தியதுடன் பிரதான தொகுதியின் நிபந்தனை மீறுதல்களை பிரதிநிதித்துப்படுத்திய 1022 அதாவது 33 சதவீத அளவாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் அந்த பிடித்தல்களில் 848 எண்ணிக்கை 2015 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரியதாக இருந்ததுடன் 2099 எண்ணிக்கை 2020 ஆம் ஆண்டிற்காகவும், 143 எண்ணிக்கை 2021 ஆம் ஆண்டிற்காகவும் உரியதாக இருந்தது.

மதுவரி அனுமதிப்பத்திரம் பெற்ற இடங்களை பரீட்சித்த போது மற்றும் மதுவரி அனுமதிப்பத்திரங்கள் பெற்ற இடங்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்த போது மிகவும் பரீட்சித்து மற்றும் முறையாக நடவடிக்கை எடுக்குமாறு மதுவரி உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. பரிசோதனை அதிகாரங்களை விரிவுபடுத்தல் மற்றும் அதற்காக தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நடாத்தப்பட்ட சுற்றி வளைப்பு தரவுகளை பகுப்பாய்வு செய்தல் மற்றும் அதில் பிரதான தொகுதியின் நிபந்தனைகளை மீறுதலை அதிக அளவில் பிரதிநிதித்துவப் படுத்தும் பிரகாரம் பரீட்சிப்பு முறைமை மற்றும் அதற்கான தொழில்நுட்ப திட்டத்தை ஈடுபடுத்துவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலையான சொத்துக்களுக்காக வருடாந்தம் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்ற தொகைக்கு சமமான தொகையொன்று திறைசேரியில் உள்ள பெறுமானத்தேய்வு ஒதுக்க நிதியத்தில் செலவு வைக்கப்படுவதுடன் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அந்த நிதியத்தில் ரூபா 65,385,315 தொகை காணப்பட்டது. மதுவரித் திணைக்களத்திற்காக 2021 ஆம் ஆண்டின் போது கணனி, துணைப்பாகங்கள் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 50 மில்லியன் வழங்குவதற்கு 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதி திறைசேரி பிரதி செயலாளரிடம் இருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் அந்த கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது. | நாட்டில் காணப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டின் காரணமாக கணனி வழங்கல்கள் தாமதமடைந்திருந்தது. 70 கணனிகள் கிடைக்கப் பெற்றுள்ளது. | நிதியத்தின் இலக்குகளை நிறைவேற்றுவதற்கு பாதீடு மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதியேற்பாட்டை பயன்படுத்துதல் வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மதுவரி வெகுமதி பணம் செலுத்துதல்.<br>மீளாய்வாண்டின் போது வெகுமதி நிதியத்தின் பணத்தில் திணைக்களத்தில் சேவையாற்றுகின்ற சகல உத்தியோகத்தர்களுக்கும் பல்வேறு அடிப்படையின் கீழ் ரூபா 109,709,955 வெகுமதி பணப் படி செலுத்தப்பட்டிருந்தது. 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் திருத்தத்துடன் செலவின எல்லையை திருத்துவதற்கும், படிகள் செலுத்துவது தாமதமடைந்ததன் காரணமாக உத்தியோகத்தர்களின் தொழில் குற்ற பிடித்தல்கள் செயற்பாடுகள் குறைவடைவதற்கு ஏற்பட்டிருந்தமை மற்றும் 818 ஆம் | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய சட்டரீதியான நிதியேற்பாடுகளை கவனத்தில் கொண்டு அதன் பிரகாரம் 818 ஆம் இலக்க மதுவரி அறிவித்தலின் உத்தேச திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

இலக்க மதுவரி அறிவித்தல் திருத்தத்திற்கு அமைச்சரவை குறிப்பொன்று சமர்ப்பிக்கப்பட்டு அதற்காக அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்படும் வரை வெகுமதி நிதியத்தில் பணத்தை பெற்றுக் கொள்வதற்காகவும் நிதியத்தின் செயற்குழுக் கூட்டத்தின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

நிதியத்தின் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2022 பெப்ரவரி 28 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்

நிதியத்திற்கான மீளாய்வாண்டு வரையுமான நோக்குகள், செயற்பாடுகளின் முன்னேற்றத்தை காண்பிக்கின்ற செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதியத்தின் ஆரம்பம் முதல் முன்னைய ஆண்டு வரையும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில் வெகுமதி நிதியத்தின் செயலாற்றல் அறிக்கை 2022 யூன் 28 ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 4.3 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டத்தின் பிரகாரம் நிதியத்திற்காக 03 கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டங்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அந்தக் கணக்காய்விற்குரிய அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கொவிட் தொற்றுநோய் நிலைமையின் காரணமாக அலுவலகத்திற்கு வருகை தரல் 50 சதவீதமாக காணப்பட்டமையின் காரணமாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதியத்தின் நோக்கங்களின் பிரகாரம் பணிகள் நிறைவேற்றப்படுகின்றமைக்கும், நிதி மற்றும் செயற்பாட்டு பணிகள் தொடர்பாகவும் ஆக்கபூர்வமாக உள்ளக கணக்காய்வு அமுல்படுத்தப்படல் வேண்டும். |

## 4.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு வருமான விடயங்களில் மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட எண்ணிக்கைக்கும் உள்ளபடியான பெறுமதிக்கும் இடையே 6 சதவீதம் மற்றும் 41 சதவீதம் முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் எட்டு செலவின விடயங்களில் 7 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டன. அதன் பிரகாரம் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலைமையின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட முறையில் ஒட்டுமொத்த கட்டணங்களைப் பெறுவதற்கும், நிதியேற்பாட்டை பயன்படுத்துவதற்கும் முடியாதிருந்தது. | பாதீட்டு தகவல்கள் மற்றும் உள்ளபடியான தகவல்கள் மாதாந்தம், மும்மாத பகுப்பாய்வினைச் செய்து வருமான இலக்கினை அடைந்து கொள்ளும் வகையில் நிதியேற்பாட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்துதல் வேண்டும். |